**<u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>**

**<u>MCOP - 99/2019</u>**

**<u>நாள் – 03.04.2025</u>**

**<u>PW – 1</u>** மூர்த்தி

**த/பெ.** ராமசாமி

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 03rd day of April 2025)**

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எனது அப்பா ராமசாமியின் ஆதார் அடையாள அட்டை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது அப்பாவின் வயதை காட்டும் வகையில் அடையாள அட்டைகள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து சமயம் எனது அப்பா TN 39 BB3250 TVS 50 XL வண்டியை ஓட்டி வந்தார் என்றால் சரிதான். எனது அப்பாவிற்கு ஓட்டுநர் உரிமம் இருந்ததா என்றால் அது எனக்கு தெரியாது. TN 39 BB 3250 வண்டியை மோட்டார் வாகன ஆய்வின் போது எனது அப்பாவின் ஓட்டுநர் உரிமம் ஆஜர் செய்யப்படவில்லை என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது அப்பா ஓட்டி வந்த TN 39 BB 3250 வண்டிக்கு வாகன காப்பீடு கிடையாது என்றால் சரிதான். நான் கூலிவேலை தான் பார்த்து வருகிறது. நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது போல விவசாய வேலை மற்றும் அயனிங் தொழில் செய்து வந்தார் என்பதை காட்ட ஆவணம் எதுவும் காட்டவில்லை என்றால் சரிதான். எனது அப்பா ஊத்துக்குளியில் உள்ள கம்பெனியில் அயனிங் மாஸ்டராக வேலை பார்த்து வந்தார் அந்த கம்பெனியின் பெயர் தெரியாது. நான் சொல்வது பொய் என்றும், எனது அப்பா எந்த கம்பெனியிலும் வேலை பார்த்து வரவில்லை என்றால் சரிதான். விபத்து சமயம் நானும், எனது அப்பா மற்றும் எனது அக்கா பேபி, வெங்கடாசலம், ஜமுனாராணி ஆகியோர் மூன்று இருசக்கர வாகனங்களில் சின்னக்காட்டுபாளையம் – குளத்துப்பாளையம் ரோட்டில் சென்றோம் என்றால் சரிதான். அப்போது எனது அப்பா ஓட்டி சென்ற TVS 50 XL வண்டி முதலில் சென்றது அவருக்கு பின்னால் தான் நாங்கள் சென்றோம். நாங்கள் மூன்று வண்டியிலும் ஒரே நேர்கோட்டில் பரஸ்பரம்

பேசிக் கொண்டு சென்றதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. எ.ம.சா.ஆ.3 ஆவணத்தில் விபத்தானது மேற்கிலிருந்து வடக்கு நோக்கி வளைந்து செல்லும் பகுதி என்றால் சரிதான். எனது அப்பா வண்டி ஓட்டும் போது தலைகவசம் அணிந்து தான் வண்டி ஓட்டி சென்றார். விபத்து நடந்த உடன் எனது அப்பாவை பெருந்துறை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கிருந்து கோயம்புத்தூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று சிகிச்சைக்கு சேர்த்தோம். ஆனால், 9 நாட்கள் கழித்து சிகிச்சை பலனின்றி எனது அப்பா அங்கேயே இறந்து போய் விட்டார். பெருந்துறை அரசு மருத்துவமனையில் டிஸ்சார்ஜ் சம்மரி கொடுத்தார்களா என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. எனது சகோதரிகளும் பனியன் கம்பெனியில் தான் வேலைக்கு சென்று வருகிறார்கள். நாங்கள் எனது அப்பாவை சார்ந்து வாழ்ந்து வரவில்லை என்றும், நானும், அப்பாவும் தனித்தனியாக வாழ்ந்து வந்தோம் என்றால் சரியல்ல. விபத்து நடந்த உடன் எனது பெரிய அக்கா பேபி தான் புகார் கொடுத்தார். ஆனால், இந்த வழக்கை தாக்கல் செய்யும்போது பேபி எங்களுடன் வராததால் 3ம் எதிர்மனுதாரராக இந்த வழக்கில் கட்சி சேர்த்துள்ளோம் என்றால் சரிதான். எனது அப்பா ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வண்டியை எப்படி ஓட்ட வேண்டுமென்ற அடிப்படை அறிவும் இல்லாமல் ஓட்டி சென்று எதிரே வந்த வாகனத்தின் மீது மோதி வலிய விபத்தை ஏற்படுத்திக் கொண்டார் என்றால் சரியல்ல. எனது அப்பா ரோட்டின் வளைவில் வந்து கொண்டிருந்த உறவினரிடம் பேசிக் கொண்டு வண்டியை ஓட்டிச் சென்று விபத்தை ஏற்படுத்திக் கொண்டார் என்றால் சரியல்ல. நாங்கள் மனுவில் கோரியுள்ள இழப்பீட்டுத் தொகை அதிகமானது என்றும், அதனால் இந்த மனு தள்ளுபடி ஆக வேண்டும் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை.

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.04.03 19:36:40 +0530

**Subordinate Judge,**
**Avinashi.**